## கடற்கரை கவியரங்கு எண் – 611 நாள் 06-03-2022

# நேசிப்போம் நிறைந்து!

மண்ணில் யாவும் சமமென்றே,
மனிதா நாமும் நினைத்திடுவோம்!
எண்ணியே வாழ்வில் இயைந்திடுவோம்!
யாவையும் அன்பால் அணைத்திடுவோம்!

புண்ணியம் தேடி அலையாது,
போர்க்குண மனத்தை தடுத்திடுவோம்!
மன்னிய வரங்களாய் வாழ்வியலை,
மருவின்றி நாளும் தொடுத்திடுவோம்!

உயிர்களை உயிர்கள் அழித்தலுமே,
உண்பதற்கன்றியது தவறாகும்!
துன்பம் செய்து துன்பத்தால்,
துவளும் உயிர்களைக் காண்போமோ!

வாடிய பயிர்களைக் கண்டே மனம்;
வாடியவர்தானே வள்ளல் பிரான்!
தேடிய வாழ்வென்று ஏதுமில்லை!
திரண்ட செல்வம் தேவையில்லை!

மூடிடும் விழிகளும் ஓர்நாளில்,
முகவரி தன்னைத் தொலைத்திடுமே!
அகவரி நிறைந்து வாழ்ந்தால்தான்,
அடுத்தவர் நம்மையும் நினைத்திடுவார்!

அறிவின் கண்களைத் திறந்திட்டால்,
ஆனந்த வாழ்வை நாம் பெறலாம்!
இனிதாய் பயணம் தொடர்ந்திடவே,
இன்னல்கள் நீங்கி வாழ்ந்திடலாம்!

- **கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**

06-03-2022 (01.00 பி.எம்.)

